myVirtualCare Portal

நோயாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான பயனர் வழிகாட்டி

User guide for patients and carers

Tamil

myVirtualCare எனும் இணைய-வழிப் பராமரிப்பைப் பெறல்

உங்களுடைய மருத்துவக் கலந்தாலோசனையில் நீங்கள் பங்குபற்றுவதற்கான வலைத்தல இணைப்பு ஒன்று உங்களுக்குக் கொடுக்கப்படும். இதற்கு ஏற்ற 'ப்ரௌசர்' (கீழுள்ள யோசனைக் குறிப்பைப் பார்க்க) ஒன்றைத் திறந்து உங்களுடைய சந்திப்புவேளையில் நீங்கள் இணைவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள படி நிலைகளைப் பின்பற்றுங்கள்.

1. உங்களைப் பற்றிய விபரங்களை உள்ளிடுங்கள், மற்றும் 'கீழ்விழு-பட்டியல்' (dropdown list)-ஐப் பயன்படுத்தி நீங்கள் எவ்விதத்தில் பங்குபற்றுகிறீர்கள் என்பதை அடையாளப்படுத்துங்கள்.
2. **Next (அடுத்து)** எனும் பொத்தான் மீது சொடுக்குங்கள்.





யோசனைக் குறிப்பு

myVirtualCare சேவையுடன் நீங்கள் வெற்றிகரமாக இணைவதானது உங்களுடைய இண்ட்டர்நெட் வேகத்தையும், நீங்கள் பயன்படுத்தும் சாதனம் மற்றும் 'ப்ரௌசர்' (வலையுலாவி)-ஐயும் பொறுத்து அமையும். குறைந்தபட்சமாக 1Mbps 'அப்லோட்' (வலையேற்றம்) அல்லது 'டவுன்லோட்' (வலையிறக்கம்)-இற்கான வேகம் தேவைப்படும். www.speedtest.net எனும் வலைத்தலத்தில் உங்களுடைய இண்ட்டர்நெட் இணைப்பின் வேகத்தையும், www.whatismybrowser.com எனும் வலைத்தலத்தில் உங்களுடைய 'ப்ரௌசர்' (வலையுலா)-ஐயும் நீங்கள் சோதித்துக்கொள்ளலாம்.

தொலைத்தொடர்பு சாதனத் தேவைப்பாடுகளைப் பற்றிய தகவல்களைப் பின்வரும் வலைத்தலப் பக்கத்தில் நீங்கள் காணலாம். www.aci.health.nsw.gov.au/__data/assets/pdf_file/0018/630252/MyVirtualCare-Recommended-System-Requirements.pdf

15 நிமிட நேர 'விடியோ' (காணொலி) அழைப்பு ஒன்றிற்குத் தோராயமாக 80MB தரவுப் பயன்பாடும், 'ஆடியோ' (கேளொலி) வசதி மட்டும் உள்ள அழைப்பிற்கு 10MB தரவுப் பயன்பாடும் தேவைப்படும்.

'ப்ரௌசர்' (வலையுலாவி) பொருந்தக்கூடிய தன்மை (Browser compatibility)

Apple Safari வடிவுரு 11.1 மற்றும் அதற்குப் பிறகானவை
Google Chrome வடிவுரு 80+
Mozilla Firefox வடிவுரு 60+
Microsoft Edge வடிவுரு 80+

'ஆடியோ' மற்றும் 'வீடியோ'-வைச் சோதித்தல்

கலந்தாலோசனையில் நீங்கள் இணைவதற்கு முன்பாக உங்களுடைய 'ஆடியோ' மற்றும் 'வீடியோ' சாதனங்களை சோதித்துக்கொள்வதற்கான தானியங்கித் தூண்டல்களை நீங்கள் காண்பீர்கள்.

1. **Audio Settings** எனும் 'கீழ்விழு-பட்டியல்' (dropdown list)-இல் இருந்து நீங்கள் விரும்பும் 'மைக்ரொஃபோன்'-ஐத் தெரிவு செய்யுங்கள்.
2. **Test Microphone** எனும் பொத்தான் மீது சொடுக்கி, ஏதாவது பேசுங்கள், அதை நீங்கள் மீண்டும் கேட்பீர்கள்.
3. **Video Settings** எனும் 'கீழ்விழு-பட்டியல்' (dropdown list)-இல் இருந்து நீங்கள் விரும்பும் **Camera** -வைத் தெரிவு செய்து, **Test Video** எனும் பொத்தான் மீது சொடுக்குங்கள்.
4. உங்களுடைய 'கேமெரா'-விலிருந்து வரும் 'வீடியோ'வை நீங்கள் திரையில் காணவேண்டும்.
5. இவையனைத்தையும் செய்த பிறகு, **Next** எனும் பொத்தான் மீது சொடுக்குங்கள்.
6. உங்களுடைய 'ஆடியோ' மற்றும் 'வீடியோ'வின் தரத்தைச் சோதித்த பிறகு **Finish (இறுதிப்படுத்து)** எனும் பொத்தான் மீது சொடுக்குங்கள்.



NSW GOVERNMENT | Health

ACI/D21/550 | ACI 0351 [03/21]

7. உங்களுடைய சந்திப்புவேளையின் நேரத்தை உள்ளிடுங்கள், மற்றும் தூண்டல் ஒன்றை நீங்கள் பார்த்தால், உங்களுடைய மருத்துவர் யார் என்பதைத் தெரிவு செய்யுங்கள்.

   பராமரிப்பாளர்களிடம் கூடுதலாக சில கேள்விகள் கேட்கப்படும்.



8. நீங்கள் உள்நுழைந்த பிறகு, இணைய-வழியில் காணும் காத்திருப்பு அறை ஒன்றிற்கு நீங்கள் மாற்றப்படுவீர்கள். நீங்கள் உள்நுழையும்போது, நீங்கள் காத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிப்பதற்கான அறிவிப்பு ஒன்று உங்களுடைய மருத்துவருக்கு அனுப்பப்படும்.

கலந்தாலோசனை அழைப்பிற்கான கட்டுப்பாட்டு முறைகள் (Consultation call controls)

இந்த அழைப்புக் கட்டுப்பாட்டு முறைகள் உங்களுடைய சாதனத்தின் 'விண்டோ'-விற்குக் கீழ் மறைவாக இருக்கும், மற்றும் நீங்கள் திரையை மீண்டும் ஒளிரச் செய்யும்போது ('மௌஸ்' அல்லது 'தொடு-திறை'யை நகர்த்தும்போது) செயல்படத் துவங்கும்.

மைக்ரொஃபோன்

நீங்கள் பேசாமல் இருக்கும்போது 'மைக்ரொஃபோன்'-ஐ நீங்கள் செயலிழக்கச் செய்துவிடலாம்.

உரையாடல்

Chat Window -விற்குள் 'டைப்' செய்து, உங்கள் 'கீ-போர்ட்'-இல் **Enter** -ஐ அழுத்தி, அல்லது **Send (அனுப்பு)** எனும் பொத்தான் மீது சொடுக்கி நீங்கள் உரையாடலாம்.

Chat Window மூலமாக ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களை நீங்கள் அனுப்பலாம்.

1. **Paper clip** சின்னத்தின் மீது சொடுக்குங்கள்.
2. **Choose file to upload** எனும் பொத்தான் மீது சொடுக்கி, அடுத்ததாக **Finish** எனும் பொத்தான் மீது சொடுக்குங்கள்.

கலந்தாலோசனையை நிறைவு செய்தல்

உங்களுடைய சந்திப்புவேளை முடிவுற்றதும், உங்களுடைய 'விடியோ' திரையின் கீழ்ப் பகுதியில் காணப்படும் **Call Control** எனும் பட்டையில் இருக்கும் தொலைபேசிப் பொத்தான் மீது நீங்கள் சொடுக்கினால் போதும்.

1. **Yes** எனும் பொத்தான் மீது சொடுக்குங்கள்.

உங்களுடைய கலந்தாலோசனையைத் தொடர்ந்து சிறியதொரு மதிப்பாய்வைப் பூர்த்தி செய்ய்மாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். உங்களுடைய அனுபவத்தைப் பற்றிய உங்களது பின்னூட்டல் எமக்கு உதவிகரமாக இருக்கும்.

கலந்தாலோசனைக்கான
இணைப்பு

சிகிச்சையகத்தின் பெயர்

சிகிச்சையகத்தின்
தொடர்பு இலக்கம்

NSW GOVERNMENT | Health